22 DEC 20
UNIVERSITY

# கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை

## இரண்டாம் வருட / முதலாம் அரையாண்டு சிறப்புக் கலைமாணித் தேர்வு – 2013/2014 (ஒக்டோபர்/நவம்பர் - 2016)

## HYS 2123 : History of Europe 1453 - 1789

நேரம் : 03 மணித்தியாலங்கள்

இவ்வினாத்தாள் இரண்டு பகுதிகளை கொண்டது. பகுதி ஒன்றிலிருந்து இரு வினாக்களையும் பகுதி இரண்டிலிருந்து மூன்று வினாக்களையும் தெரிவு செய்து மொத்தமாக ஐந்து வினாக்களுக்கு விடை எழுதுக.

**எழுத்து தெளிவில்லாதவிடத்து புள்ளிகள் குறைக்கப்படலாம்**

---

### பகுதி – I

01. அ) மறுமலர்ச்சி இயக்கமானது முதலில் இத்தாலியில் தோன்றியமைக்கான காரணங்களை விளக்குக.

ஆ) மறுமலர்ச்சி இயக்கமானது ஏனைய ஐரோப்பிய நாடுகளில் எவ்வாறான தாக்கத்தினை ஏற்படுத்தியது என்பது பற்றி ஆராய்க.

( 20 புள்ளிகள் )

02. அ) " 1453 இல் கொன்ஸ்தாந்துநோபள் துருக்கியரால் கைப்பற்றப்பட்டமையே நாடுகாண் பயணங்களை மேற்கொள்ள ஏதுவான காரணமாகும் " இக்கூற்றின் பொருத்தப்பாட்டை ஆராய்க.

ஆ) நாடுகாண் பயணங்களை ஊக்குவிப்பதில் ஸ்பானியா, போர்த்துக்கல் நாடுகளின் பங்களிப்பினைக் குறிப்பிடுக.

( 20 புள்ளிகள் )

03. அ) முப்பதாண்டுப் போரின் பிரதான கட்டங்களைச் சுருக்கமாக விளக்குக.

ஆ) முப்பதாண்டுப் போரில் பிரான்சின் எழுச்சி பற்றி மதிப்பீடு செய்க.

( 20 புள்ளிகள் )

## பகுதி - II

04. ஐரோப்பாவில் சமய சீர்திருத்த இயக்கம் ஏற்படுவதற்கான காரணங்களைச் சுருக்கமாக குறிப்பிட்டு, இதில் மார்டிங் லூதரின் பங்களிப்பு பற்றி ஆராய்க.

(20 புள்ளிகள்)

05. ஸ்பானியாவின் எழுச்சிக் கட்டங்களைப் பேடினனட், இஸபெல்லா, 5ஆம் சாள்ஸ், 2ஆம் பிலிப் ஆகிய ஆட்சியாளர்களின் காலத்துடன் ஒப்பிட்டு மதீப்பீடு செய்க.

(20 புள்ளிகள்)

06. பதினான்காம் லூயி மன்னனது ஆட்சியில் பிரான்சின் எழுச்சி பற்றி பரிசீலனை செய்க.

(20 புள்ளிகள்)

07. " ரஷ்யா ஓர் வல்லரசாக வளர்ச்சி பெற்றமைக்கு மகாபீட்டரின் பங்களிப்பே முக்கிய காரணமாகும் " இக்கூற்றின் பொருத்தப்பாட்டை ஆராய்க.

(20 புள்ளிகள்)